## உடுமலைப்பேட்டை நகராட்சி
## 12 .01.2024 – ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு
## நடைபெற்ற சிறப்புக் கூட்ட நிரல்

| வ. எண் | நகர் மன்றத் தீர்மான எண் | Subjects in Agenda | மன்றத்தின் முடிவு |
|---|---|---|---|
| 1 | 1030 | உடுமலைப்பேட்டை நகராட்சி 30.03.1983ஆம் தேதிய உள்ளாட்சித் துறை அரசாணை எண். 473 –ன்படி 1.4.1984 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பு 7.41 சதுர கிலோ மீட்டராக உள்ளது. அரசாணை (நிலை எண். 142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள். 23.11.2023–ன்படி நகராட்சி அருகாமையில் உள்ள கிராம ஊராட்சிகளை ஒருங்கிணைந்து எல்லை விரிவாக்கம் செய்ய பிரேராணை கோரப்பட்டுள்ளது. உடுமலைப்பேட்டை நகராட்சியின் மக்கள் தொகை 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 61150 ஆகும். மேலும், இந்நகராட்சி தற்போது 33 வார்டுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.<br>உடுமலைப்பேட்டை நகராட்சியில் இயல்பு நிலை கணக்கு நடைமுறையில் வருவாய் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, ஆரம்பக் கல்வி நிதி என நிதி வாரியாக பிரிக்கப்பட்டு நிர்வாகிக்கப்பட்டு வருகிறது. அதன்படி இந்நகராட்சியின் கடந்த மூன்று ஆண்டுகளின் வருமானம் கீழ்க்கண்ட விபரப்படி உள்ளது.<br>2020–2021ஆம் ஆண்டு வருமானம் : 2738.58 (இலட்சத்தில்)<br>2021–2022ஆம் ஆண்டு வருமானம் : 2731.17 (இலட்சத்தில்)<br>2022–2023ஆம் ஆண்டு வருமானம் : 3211.22 (இலட்சத்தில்)<br>எனவே, அரசாணையின்படி உடுமலைப்பேட்டை நகராட்சியின் சராசரி வருமானம் ரூபாய் : 3211.22 (இலட்சத்தில்) உள்ளதால் சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த வாய்ப்பு உள்ளது. மேலும், | அனுமதி வழங்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>நகராட்சியின் எதிர்கால வளர்ச்சியினை கருத்தில் கொண்டு உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு அருகாமையில் உள்ள கீழ்க்கண்ட 13 கிராம ஊராட்சிகளை உடுமலைப்பேட்டை நகராட்சியுடன் ஒருங்கிணைத்து எல்லை விரிவாக்கம் செய்வதற்கு, மாவட்ட ஆட்சியர்,திருப்பூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் மூலமாக அரசிற்கு உரிய கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.<br>எண்.</th><th>கிராம ஊராட்சியின்<br>பெயர்</th></tr>
<tr><td>1.</td><td>கணக்கம்பாளையம்</td></tr>
<tr><td>2.</td><td>பெரிய கோட்டை</td></tr>
<tr><td>3.</td><td>போடிபட்டி</td></tr>
<tr><td>4.</td><td>குருஞ்சேரி</td></tr>
<tr><td>5.</td><td>சின்னவீரன்பட்டி</td></tr>
<tr><td>6.</td><td>கண்ணம்ம நாயக்கனூர் I–II</td></tr>
<tr><td>7.</td><td>ராகல்பாவி</td></tr>
<tr><td>8.</td><td>கணபதிபாளையம்</td></tr>
<tr><td>9.</td><td>பூலாங்கிணறு</td></tr>
<tr><td>10.</td><td>குரல்குட்டை</td></tr>
<tr><td>11.</td><td>புக்குளம்</td></tr>
<tr><td>12.</td><td>கோட்டமங்கலம்</td></tr>
<tr><td>13.</td><td>பொன்னேரி</td></tr>
<tr><td>14.</td><td>தொட்டம்பட்டி</td></tr>
<tr><td>15.</td><td>தாந்தோனி</td></tr>
<tr><td>16.</td><td>வடபூதிநத்தம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு :–</u> மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
(ந.க.எண் 1188 /2015/எப்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>2.</td>
<td>1031</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சி எல்கைக்குட்பட்ட 33 வார்டுகளில் வசிக்கும் பொதுமக்கள் அரசின் திட்டங்களான கலைஞர் உரிமைத் தொகை (KMUT), முதியோர் உதவித் தொகை, கைம் பெண் உதவித் தொகை, கணவனால் கைவிடப்பட்டவர், மற்றும் கல்விக் கடன், உள்ளிட்ட பிற அரசு திட்ட நல உதவி திட்டங்களில் பயன்பெற அரசு அலுவலகங்களில் விண்ணப்பம் அளிக்கப்படும்போது வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள எண் தேவைப்படுகிறது. ஏற்கனவே 2003–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மொத்தம் 5354 நபர்கள் உள்ளனர்.</td>
<td>அனுமதி வழங்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | இக்கணக்கெடுப்பு பணி கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்டதால், தற்போதுள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள நபர்களின் பட்டியல் அரசின் உரிய வழிகாட்டுதலின்படி தயார் செய்வதற்கு ஆட்டோ விளம்பரம், துண்டு பிரசுரம் மற்றும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும், துண்டு பிரசுரம் அச்சடித்தல் போன்றவைகளுக்கு பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம்ரூபாய்.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>__அலுவலகக் குறிப்பு :-__மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 91 /2024/எப்1) | |
| 3. | 1032 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பஞ்சலிங்கம் அருவியிலிருந்து நேரடியாக தலைமை குடிநீர் நிலையத்திற்கு வரும் பிரதான குழாய் (பைலட் மெயின்) பழுதடைந்துள்ளதால் அணையின் நீர்மட்டம் குறையும் பொழுது கோடைக் காலங்களில் குடிநீரை தங்குதடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக பழுதடைந்துள்ள குழாயினை சரிசெய்யவும், சேதமடைந்துள்ள வால்வுகளை பழுதுபார்க்கவும் மற்றும் வால்வு தொட்டிகளுக்கு கான்கீரிட் கவர் சிலாப் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும். பணியின் அவசர அவசியம் கருதி இச்செலவினத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : -மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 94 /2024/இ2) | **அனுமதி வழங்கப்பட்டது.** |

**நகரமன்றத் தலைவர்**
**உடுமலைப்பேட்டை நகராட்சி**